THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

August, 1954

மதுரை-ராமநாதபுரம அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஆகஸ்டு, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:— C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர் :— கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.

„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.

„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.

„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்
3. சிறுவர் பாகம்
4. பிரசங்கக் குறிப்புகள்
5. இயேசுவின் ஜெபப்பள்ளி
6. வருங்கால இந்திய சபை
7. வி.மு. சங்கப்பொருட்கள்
8. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்
சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV பசுமலை, ஆகஸ்டு 1954 இலக்கம் 10

வருடசந்தா: 1 ரு. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாக்குளம், மதுரை,
ஜூலை 26, 1954.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே:—

இந்தமீ முதல் தேதியில் கமுதிப்பாஸ்டரேட்டிலுள்ள நெரிஞ்சிப்பட்டி கிராமத்தில் சுமார் இருபது குடும்பங்களுக்கு ஞானதீட்சை கொடுக்கும் பெரிய சிலாக்கியம் கிடைத்தது. இவர்களுடைய விசுவாசத்தையும் உற்சாகத்தையும் கண்டு பரவசமடைந்தேன். இவர்கள் கொண்ட விசுவாசத்தில் வேரூன்றிபலப்பட நீங்கள் ஜெபிப்பீர்களென நம்புகிறேன்.

7ம்வ ராஜபாளையம் பாஸ்டரேட்டிலுள்ள சோளபுரத்தில் புதிய ஆலயமொன்றைப் பிரதிஷ்டை செய்தேன். இதுவும் சந்தோஷகரமான ஓர் வைபவமாயிருந்தது.

19—22ம்வ வரை குருமாரின் ஒடுக்கக்கூட்டம் குற்றாலத்தில் நடைபெற்றது. இது ஓர் ஆசீர்வாதமான தருணமாயிருந்ததற்காக நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இதன் பலன் திருச்சபையின் வாழ்க்கையில் காணப்படுமென நிச்சயமாய் நம்புகிறேன்.

ஆண்டுதோறும் வழக்கமாய் நடைபெற்ற ஆவிக்குரிய கூட்டங்கள் இந்தவருடம் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் அக்டோபர் 5—7ம்வகளிலும், 8—9ம்வகளிலும் நடைபெறும். சென்னையிலிருந்து ஸ்ரீ என். தானியேல் அவர்களும் அவரைச் சேர்ந்த கூட்டத்தாரும் நமது கூட்டங்களை நடத்துவார்களென எதிர்பார்க்கிறோம். நமது சபைகள் மேல் ஆண்டவரின் அருள்மாரி பெய்யும்படி கடந்த ஒன்பது மாதங்களாக் ஜெபித்து வந்தோம். இந்த வருடம் நடக்கும் ஆவிக்குரிய கூட்டங்களில் கடவுளின் அருள்மாரி பெய்யும்படி வரப்போகும் மூன்றுமாதங்களில் ஊக்கமாய் ஜெபிப்போமாக. இந்த ஆவிக்குரிய கூட்டங்களுக்காக ஒரு சிறு ஜெபம்

தயார் செய்திருக்கிறேன். நமது அத்தியட்சாதீனத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் அனுதினமும் இந்த ஜெபத்தை உபயோகிக்கக் கேட்கிறேன்.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலுள்ள எவான்ஸ்டன் நகரில் நடக்கும் இரண்டாவது சர்வலோக திருச்சபை சங்க மகாநாட்டிற்கு இன்று புறப்படுகிறேன். அது ஆகஸ்டு 15—31ம்வ. நடைபெறும். இந்த விசேஷமான மகாநாட்டைக் கடவுள் ஆசீர்வதிக்க எல்லாச் சபைகளிலும் ஜெபம் ஏறெடுக்கப்படும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இது ஒரு சாதாரணமான கூட்டமாயிராது. என்றாலும் கர்த்தருக்குச் சித்தமானால் எங்குமுள்ள சபைகள் ஐக்கியத்தில் நெருங்கி வாழவும், இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக இவ்வுலகில் அது ஒரு திட்டவட்டமான சாட்சியாய் விளங்கவும் இம்மகாநாடு ஓர் நல்ல தருணமாகலாம்.

இம்மகா நாட்டிற்கு முன்னும் பின்னும் தென்னிந்திய திருச்சபைக்காக அமெரிக்காவிலுள்ள சபைகளில் உபந்நியாசங்கள் செய்வேன். செப்டெம்பர் மீ தில் அமெரிக்கன் போர்டு சங்கத்தாரைச் சந்திப்பேன். கர்த்தருக்குச் சித்தமானால் அக்டோபரில் நடக்கும் ஆவிக்குரிய கூட்டங்களை ஆரம்பித்துவைக்க வருவேன். உங்களையும் அத்தியட்சாதீனக் காரியங்களையும் என் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுவேன். நீங்கள் எனக்காக ஜெபித்து வருவீர்களென நம்புகிறேன்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

செப்ட்	5	திரி. திரு. பின்ஞாயிறு	12
	12	”	13
	19	திரி. திரு பின்ஞாயிறு (குஷ்டரோக ஞாயிறு)	14
	21	பரி. மத்தேயுவின் திருநாள்.	
	26	திரி. திரு. பின் ஞாயிறு (சபை ஐக்கிய ஜெபநாள்)	15
	29	பரி. மிகாவேல், சகல தேவதூதர் திருநாள்	

2. சுவிசேஷப் பிரபல்ய ஊழியம் வத்தலக்குண்டு பாஸ்டரேட்

வத்தலக்குண்டு பாஸ்டரேட் மேற்கு வட்டகை தேவதானப் பட்டியை அடுத்துள்ள 5 கிராமங்களில் நமது அத்தியக்ஷாதீன சுவி சேஷ ஊழியக்கமிட்டிமார் செய்த தீர்மானத்தின்படி நமது அத்தி யக்ஷாதீன சுவிசேஷ பிரபல்ய ஊழியர் (Gospel Band workers) 3 பேர் ஸ்ரீ மான்கள் பேரின்பம், மாசில்லாமணி, வேதமாணிக்கம் நாளவது ஜூலை 3உ இரவு தேவதானப்பட்டி வந்து சேர்ந்தார் கள். 4உ ஞாயிறு தேவதானப்பட்டியில் ஓய்வுநாள் ஆராதனையும் அன்று பிற்பகல் தனித்தாள் வேலைசெய்யப்பட்டது. இரவு தேவ தானப்பட்டி சேரியில் தெருப்பிரசங்கம் வாத்தியக் கருவிகளின் உதவியைக்கொண்டு நடைபெற்றது. சுமார் 500 பேருக்குமேல் ஆஜராயிருந்தனர். ஸ்தலத்து உபதேசியார் ஸ்ரீ செபஸ்டியான் பேசத்தொடர்ந்து 3 சுவிசேஷகர்களும் சங்கீதத்துடன் பிரசங்கித்த னர்.

தேவதானப்பட்டிக்குக் கிழக்கே உள்ள புல்லக்காபட்டியில் மாதாரிகளுக்கு ஊழியம் செய்யப்பட்டது ஏற்கனவே இத்தெரு வில் மார்க்கத்தை ஒப்புக்கொள்ள வாஞ்சையுள்ள 2வாலிபர் உண்டு அதே நாள் இரவு மறுமுறையும் தேவதானப்பட்டி சேரியில் ஒரு காலக்ஷேபம் செய்யப்பட்டது. அநேகர் பெருங்கூட்டமாகக் கூடிக்கேட்டார்கள்.

தேவதானப்பட்டிக்கு மேற்கேயுள்ள 15 குடும்பங்களடங்கிய குறவர்கள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. இங்கு நமக்கு 2 கிறிஸ்தவக் குடும்பங்கள் ஏற்கனவே உண்டு. அன்றிரவும் அவர்கள் மத்தியிலேயே ஊழியம் செய்யப்பட்டது. 10 குடும்பங்கள் மார்க் கத்தில் சேர்ந்து ஞானதீட்சை பெற்றுக்கொள்வதாக வாக்களித்தார் கள்.

வேதப்பிரதிகளை பிரயோகம் செய்து தனித்தாள் வேலை தேவ தானப்பட்டியில் உயர் ஜாதி இந்துக்கள் மத்தியில் செய்யப்பட்டது. அன்றிரவு காலக்ஷேபம் நடந்தது. ஏராளமான இந்துக்களும், முஸ் லீம்களும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டுப் போனார்கள்.

பெருமாள்கோவில்பட்டி, செங்குளத்துப்பட்டியிலுள்ள குடும்பமாருக்குள் தனித்தாள் வேலை செய்யப்பட்டது. இரவில் பெருமாள் கோவில்பட்டியில் காலக்ஷேபம் நடந்தது. ஸ்தலத்து உபதேசியார் ஸ்ரீ செபஸ்டியான் அவர்கள் மூலமாக ஏற்கனவே பலகாலமாக இங்கு ஊழியம் செய்யப்பட்டதன் பலனாக 10 குடும் பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதாக பகிரங்கமாக வாக்குக்

கொடுத்தார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கங்குவார்பட்டி-சேரி-தனித்தாள் ஊழியம்-இரவில் தெருப்பிரசங்கம் இதிலும் நீண்டகாலம செய்யப்பட்ட ஊழியத்தின் பலனாக மூக்கன் என்பவரும் அவரைச் சேர்ந்த 10 குடும்பங்களும மார்க்கத்தில் உடனே சேருவதாக பகிரங்கமாய் அறிக்கையிட்டார்கள்.

இரண்டு இடங்களில் அங்குள்ள கிறிஸ்தவர்களுக்காக ஓய்வு நாள் ஆராதனை நடத்தப்பட்டது. இரவில் அங்குள்ள 150 வீடு களடங்கிய குடும்பமாருக்குள் தெருப்பிரசங்கம் செய்யப்பட்டது. பெரிதும், பயங்கரமும் உள்ள விக்கிரகங்களை அடக்கியுள்ள அவர்கள் கோவிலுக்கு முன்னிலையிலேயே ஆண்டவராகிய இயேசுவின் மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்யக்கேட்டார்கள். 500க்மேல் ஜனங்கள் கூடி சந்தோஷத்துடன் கேட்டார்கள். மறுமுறையும் சந்திக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள்.

தொடர்ந்து செய்யப்படவேண்டிய ஊழியத்தைப்பற்றி முயற்சி எடுத்து வருகிறோம். ஜெபிக்கவும், என்று பாஸ்டரேட் காரியதரிசி கனம் செபஸ்டியான் ஆசிரியர் எழுதுகிறார்.

3. இரண்டாம் சர்வலோக கிறிஸ்துசபை கவுன்சில்

இவான்ஸ்டன்—ஆகஸ்டு 15—31, 1954

இம்மாசம் 15-31ம் தேதிகளில், அமெரிக்க் தேசத்து, இல்லிநொய்ஸ் மாகாணத்து இவான்ஸ்டன் பட்டணத்து வடமேல் சர்வ காலாசாலையில், இரண்டாம் சர்வலோக கிறிஸ்து சபை மகாநாடு கூடும். உலகத்தின் நாலுபாகங்களிலுமுள்ள புரோட்டஸ்டென்று சபைகளின் பிரதிநிதிகளாக ஏறக்குறைய 400 பேர் கூடுவார்கள். அதில் சிந்திக்கப்படும் முக்கிய விஷயம் கிருஸ்துவே, உலகத்தின் நம்பிக்கை. தென் இந்திய சபையிலிருந்து 6 பேர் பிரதிநிதிகளாகச் சென்றிருக்கிறார்கள். இந்த மகாநாட்டில் செய்யப்படும் தீர்மானங்கள் வெளிப்படுத்தப்படும்போது அதை இப்பத்திரிகையில் அச்சிடுவோம. இவ்வியாசத்தில் இப்பொருளின் சில முக்கிய விஷயங்களை மாத்திரம் குறிப்பிடுகிறோம்.

1, நம்பிக்கை என்னும் பதம். நம்பிக்கை என்னும் பதம், எகோவா செய்யப்போகிற பெரிய காரியங்களைக் குறித்த எதிர் பார்ப்பு—அவர் வல்லமையைக்குறித்த ஸ்திரமான எண்ணம் என்பதைக்குறிக்கும். நன்மை எப்படியாவது வரும் என்ற நிச்சயத்தோடு திடமனதாகக் காத்திருப்பதே நம்பிக்கை, பழைய ஏற்பாட்டில் யூதர் இவ்விதமாக மேசியாவின் வருகையைக் குறித்து நல்நம

பிக்கையுடையவர்களாயிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். (சங் 72 : 96-98 ; ஏசா. 9 : 6, 55 : 6) கடவுளே, நம்பிக்கையின் தேவன் என்றும் இஸ்ரவேலின் நம்பிக்கை என்றும் கூறியிருக்கிறது. (எரே. 14 : 3. 17 : 13) கிறிஸ்துமார்க்கம் நம்பிக்கையின் மார்க்கம் (அப்போஸ்தலர் 13 : 32, 23 : 8, 26 : 6, 28 : 20 ; 1 பேதுரு 1: 3, 2·பேது 1 : 19) தற்காலம் கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு அருளப் பட்டிருக்கிறது. இனிமேலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் விசுவாசிகளுக்கு மேலான ஜீவியம் கிடைக்கும்.

" நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந் ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேது வாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத் தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்."

2 மனிதனுடைய முயற்சி விருதா. நாம் உலக சம்பவங்களைக் கவனிக்கும்போது, மேலான நிலைக்கு மனிதன் எட்டுவான் என்னும் நம்பிக்கை விருதாவென்று தோன்றுகிறது உலகத்திலுள்ள அறி வீனத்தை நீக்கி விட்டால் மனிதன் ஈடேறக்கூடும் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் கல்விகற்பதினால் பரிசுத்த ஜீவியம் கிடை யாது. படிப்பு அதிகப்பட்ட நாடுகளில் கொலை, களவு, துன்மார்க் கம் அதிகமாய் காணப்படுகிறதே. வேறு சிலர் இவ்வுலகின் தற் கால தீமைகளுக்குக் காரணம் வறுமை என்று சாதிக்கிறார்கள். வறுமை, எல்லாதீமைக்கும் காரணமாயிருந்தால் அமெரிக்கா, இங்கி லாந்து முதலிய ஐசுவரிய நாடுகளின் தீமை கூடுதலாய் காணப்படு வதின் காரணம் என்ன? சுயாதீனமும், தீமையை அகற்றாது என்பது உண்மை.

3. கடவுள் கிரியை செய்கிறார். பாவமே, உலகத்திலுள்ள எல்லாத்தீமைகளுக்கும் வேர். பாவத்தை அகற்றக்கூடியவர் கிறிஸ்து மாத்திரம். கிறிஸ்து இவ்வுலகத்துக்குக் கடவுளால் அனுப்பப்பட் டார். அவரே சமாதான காரணர் அவர் தாழ்மையான ஒரு நிலை மையில் வந்து, சிலுவை பரியந்தம் தம்மைத் தாழ்த்தி, மனிதனின் பாவத்துக்காக் சிலுவையில் மரித்தார். பரிசுத்தாவியின் மூலமாக கடவுள் கிரியை நடப்பிக்கிறார். ஒரு புதிய உலகத்தை ஒரு புது ராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபிக்கப்போகிறார். கிறிஸ்து உயிரோ டெழுந்ததினால் ஒரு புது நம்பிக்கை ஜீவனுள்ள நம்பிக்கை மனித னுக்கு உண்டாயிருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனை அடைந்து கிறிஸ்துவின் சந்நிதானத்தில் எக்கால மும் ஜீவித்திருப்பார்கள். (யோவான் 14: 2 ; லூக்கா. 20 : 35 ; வெளி. 7 : 14) இயேசு உயிர்த்தெழுந்ததும் பரலோகத்துக்குச் சென்றதும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு உறுதி (அப். 17:31; எபே.1:13)

நமக்குள்ளிருக்கிற பரிசுத்த ஆவியானவரின் கிரியை, இந்த நம்பிக்கைக்கு அச்சாரம் (ரோ. 8 : 16 ; 2 கொரி. 1 : 20).

4. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நம்பிக்கை ஆதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து நம்பிக்கையுடையவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் அதுவே. அவர் மறுபடியும் வருவார் என்று மிகவும் திட்டமாய்ப் போதித்திருந்தார். "நான் வருமளவும்" என்பது கிறிஸ்துவின் முக்கிய போதனை. "நமது ஆண்டவர் வருகிறார்" என்னும் அர்த்தம் கொண்ட "மாறனாதா என்னும் அரமேயபதத்தை ஆதி கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது சொன்னார்கள். 'கர்த்தர் வருகிறார்' (1 கொரி. 16 : 22) இயேசுகிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகுதலை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் (தீத்து 2 : 13).

5. அவருடைய வருகையை எதிர்பார்ப்பது பரிசுத்த ஜீவியத்துக்குத் தூண்டிவிடும். மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்த இரட்சகர் மறுபடியும் வருவார். நமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளின் கணக்குகளைக் கேட்க வருவார். புத்தியுள்ள கன்னிகைகளைப்போல விழித்திருக்க வேண்டும். தோட்டக்காரன் தன் எஜமானுடைய வருகைக்கு சந்தோஷமாகக் காத்திருப்பதுபோல் கிறிஸ்தவ விசுவாசி காத்திருக்கவேண்டும். இதுவே பக்தியுள்ள ஜீவியத்துக்குத் தூண்டுகோல்.

அவர் வருகிறார். ராஜனாகவும் நியாயாதிபதியாகவும் வருவார். ஆகையால் அவரை நேசித்து அவருடைய வருகைக்குக் காத்திருக்கிறவர்களுக்கு அவருடைய இரண்டாம் வருகை சந்தோஷமாயிருக்கும்.

"இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி 21:5).

"இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி. 22:7).

"இதோ சீக்கிரமாய் வருகிறேன்." ஒவ்வொருவனுக்கும் அவனவன் கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" (வெளி 22:2).

"இவைகளைச் சாட்சியாகக் கூறுகிறவர் ஆம் சீக்கிரம் வருகிறேன் என்கிறார். ஆமென் ஆண்டவராகிய கிறிஸ்துவே. வாரும்" (வெளி.22:20).

(— தேசோபகாரி.)

4. வடக்கு லோக்கல் கவுன்சிலில் சுவிசேஷ ஊழியம்

வெறியப்பூர் கிராமத்தைச்சேர்ந்த கிராம முன்ஸீப் அவர்கள் வடக்குலோக்கல் கவுன்சில் தலைவர் சங்கை தேவப்பிரகாசம் ஐயரவர்களுக்கு கடிதம் எழுதி, இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை தன் கிராம மக்களுக்கு பிரசங்கிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதின் பிரகாரம் ஜூன் மாதம் 16, 18உ களில் இந்த வட்டகையிலுள்ள சுவிசேஷகர்களும் வேதாகம பெண்களும், சங்கை தங்கையா போதகரும், சுவிசேஷ பிரசங்கங்கள் செய்து, வேதாகம பகுதிகளை விற்றனர்.

இரண்டாம் நாள் இரவு அந்த கிராம முன்ஸீப் அவர்கள் தலைமையிலேயே "கிறிஸ்துவின் ஜீவியசரித்திரம்", என்பதின் பேரில் இரவில் ஓர் நேர்த்தியான பஜனை பிரசங்கம் நடைபெற்றது ஏறக்குறைய 350 பேர்கள் வந்து கேட்டனர். அப்பொழுது தலைவர் கூறினது "நான் இந்துவாக இருந்தபோதிலும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். இந்த கிராமத்திலுள்ள நீங்களும் அவரை அறியவேண்டுமென்று இந்த தேவ ஊழியரை வரவழைத்தேன். சேர்மன் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என் வணக்கம்" என்று கூறினர். கிறிஸ்துவைப்பற்றி அறிய இந்துக்கள் இவ்வளவு ஆவலாயிருப்பதற்காக நாம் கர்த்தரைத் துதித்து, இந்த பாகத்தில் நடக்கும் ஊழியத்திற்காக ஜெபிப்போமாக என்று ஸ்ரீ ஜூபிலிரத்னம் ஆசிரியர் எழுதுகிறார்.

சிறுவர் பாகம்

(கணம் தனமணி காபிரியேல் அம்மாள், மதுரை)

வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். (சங்கீதம் 127 : 5)

புதிய விவாகமான இரு தம்பதிகள் வேலையினிமித்தம் தங்கள் பெற்றோரை விட்டுப் பிரிந்து வேறே ஊருக்குப் போய் அங்கே தனியாகக் குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். மனைவி தனது இளவயதிலிருந்தே கடவுளை நேசித்து அவருக்குத் தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்திருந்தாள். அவள் கணவனோ கிறிஸ்தவனாயிருந்தாலும் பக்தியுள்ளவன் அல்ல "தன் கையே தனக்கு உதவி" என்றபடி எப்பொழுதும் உற்சாகமாய் உழைத்துப் பற்பல வழிகளிலும் பொருள் சம்பாதிக்கவும், தனக்குப்பேர்ப்பிரஸ்தாபம் உண்டாக்கவுமே முயலுவான். மனைவி எப்போதும் ஜெபித்துத் தனக்கும்

தன் கணவனுக்கும் கிடைக்க வேண்டிய உன்னத பெலனை நாடின தோடு தன் கணவனையும் தன்னோடு சேர்ந்து ஜெபிக்க விரும்புவாள். அவனோ, "ஜெபம் செய்வது உன்னைப் போன்ற பெண்களுக்கும், தைரியமில்லாத, சோம்பேறிகளான ஆண்களுக்குத்தான் அவசி யமே ஒழிய என்னைப்போன்ற சதா உழைப்பாளிகளுக்குக் காரியம சாதிக்க ஜெபம் வேண்டுவதில்லை" என்று ஏளனமாகச் சொல்லி விடுவான். ஓய்வுநாள் ஆராதனைக்கும் போகாமல், தனக்கு இளைப் பாற அந்த நாள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுவான்.

காலங்கள் சென்றன, அவர்களுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் பிறந்தார்கள். மனைவி தன் பிள்ளைகளைக் கூடியவரையில் பிரயாசப் பட்டுக் கடவுளுடைய பாதையில் நடத்த ஆசைப்பட்டாள். வீட்டில் தன் பிள்ளைகளோடு கடவுளைப்பற்றிச் சம்பாஷிப்பாள். ஆனால் தகப்பன் அவர்களுக்காக யாதொரு கவலையும் எடுத்துக்கொள்ளா மல் தன் வேலையே பெரிதென்று இருந்தபடியால் பையன்கள் வளர வளரக் கீழ்படியாதவர்களானார்கள்

ஒரு ஓய்வுநாள் காலையில் தாய் தன் இரு பையன்களையும் ஆரா தனைக்கு வரும்படி எவ்வளவோ சொல்லியும் அவர்கள் போகாமல் வீட்டில் இருந்துவிட்டார்கள். தாய் மிகுந்த வருத்தத்தோடே ஆலயம் சென்று ஆராதனை ஆரம்பிக்குமுன் முழங்கால் ஊன்றி குணப்படாத தன் புருஷனுக்காகவும் தன் சீர்கேடான மக்களுக் காகவும் கண்ணீரோடு ஜெபித்தாள்.

வீட்டில் தகப்பன் வழக்கம்போல் தனது அறையில் சிக ரெட்டை வாயில் பிடித்தபடி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு சாவதானமாய் அன்றைக்கு வந்த பத்திரிகையை வாசித்துக்கொண் டிருந்தார். அடுத்த அறையில் பையன்கள் இருவரும் பலவித மாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். மூத்தவனுக்கு வயது பத்து, இளையவனுக்கு எட்டு. இளையவன் மூத்தவனைப்பார்த்து "அண்ணே! நீ பெரியவனு வந்தா அம்மா மாதிரி ஒழுங்காக கோவிலுக்குப் போவியா? அல்லது அப்பா மாதிரி நீஸ் பேப்பர் படிப்பியா?" என்று கேட்டான் மூத்தவன் தம்பியைப் பார்த்து," போடா போ, நான் அம்மா மாதிரியும் இருக்கமாட்டேன் - அப்பாமாதிரியும் இருக் மாட்டேன் எனக்குக் குதிரைச் சவாரி ரொம்பவும் பிடிக்கும். அதனால் நல்ல குதிரை வாங்கி ஞாயிற்றுக்கிழமைகளில் வெகு தூரம் சவாரி விடுவேன் தெரியுமா? என்றான் இவர்கள் சம்பாஷணை பக்கத்து அறையில் பேப்பர் வாசித்துக்கொண்டிருந்த தகப்பனார் கவனத்தை இழுத்து அவ்வார்த்தைகள் அவர் இருதயத்தில் அம் பைப்போல் பாய்ந்தது. அப்புறம் பேப்பர் வாசிக்க முடியவில்லை. தனது அருமையான மக்களின் பிந்திய வாழ்க்கை எப்படியாகும்

என்பதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். அவர்கள் கடவுளை மறந்து, துன்மார்க்கரோடு சேர்ந்து பெற்றோருக்கும் தங்களுக்கும் பிரயோஜனமில்லாதவர்களாகிக் கெட்டுப்போவார்கள் என்று உணர்ந்தார். அப்போதுதான் மனைவியின் அன்பும் கரிசனையும் கொண்ட போதனைகள் ஒவ்வொன்றாய் அவர் ஞாபகத்தில் வந்தன. கவலை கொண்டார், கடவுளையும் அவர் உதவியையும் தேடினர்.

மனைவி வந்ததும், பிள்ளைகளின் சம்பாஷணையைப்பற்றி அவளிடம் தனித்துக் கூறி, தான் அதுவரை ஆவிக்குரிய விஷயத்தில் அசட்டையாயிருந்ததுபற்றி மனஸ்தாபப்படுவதாக அவளிடம் கூறினர். அன்று முதல் அந்த வீட்டில் ஒரு ஒளி பிரகாசித்தது இரவில் பெற்றோரும் பிள்ளைகளுமாகக் கூடி வேதம் வாசித்து ஜெபித்தார்கள். அடுத்த நாள் காலையிலும் அவ்வாறே ஜெபித்துப் பின் வேலைகளைத் தொடங்கினர்கள் அப்பழக்கத்தை அவர்கள் அப்புறம் ஒருபோதும் விட்டுவிடவில்லை. அவ்வீடு மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்ட வீடாயிருந்தது.

பிரசங்கக் குறிப்புகள்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்)

தேவ பராமரிப்பு

“ இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள் ” லூக். 12.6

வேதத்தில் உவமானங்களுக்கு குறைவில்லை மாடுகளின் பொறுமை, ஆடுகளின் பேதமை. எறும்பின் சுறுசுறுப்பு, சிலந்திப் பூச்சியின் சாமர்த்தியம், மான்களின் ஓட்டம், கழுகுகளின் வேகம், புறக்களின் சாந்தம், பாம்பின் வினை, இப்படிப்பட்ட அனந்தம் உண்டு. இவைகளோடு அற்பமான அடைக்கலான் குருவிகளையும் ஆண்டவர் மறந்துபோகவில்லை. மத்தேயு காசுக்கு இரண்டு என்கிறர். லூக்கா இரண்டு காசுக்கு ஐந்து குருவிகள் என்றார். இதிலே விரோதம் ஒன்றுமில்லை. அணுவுக்கு இரண்டு பழங்கள் என்று கடைக்காரன் சொல்லும்போது இரண்டு அணுவுக்கு ஐந்து தரக்கூடாதா என்று கேட்க அப்படியும் ஒன்று போட்டுக்கொடுப்பது வழக்கமே. இரண்டு காசுகள் வாங்கும் போதுகூட ஒரு குருவி போட்டுக்கொடுப்பது, அடைக்கலான் குருவிகள் அற்பமானவைகள் என்பதைக் காட்டுகிறது. அவைகள் அற்பமானவைகளே, சிறகில அழகில்லை, குரலில் இனிமையில்லை,

விருந்தாக்கிச் சாப்பிட உடலில் இறைச்சியுமில்லை. அவ்வளவு அற்பமான அடைக்கலான் குருவிகளில் ஒன்றாலும் கடவுளால் மறக்கப்படுகிறதில்லையே; அப்படியிருக்க எவ்வளவோ விசேஷித்தவர்களாகிய உங்களை அவர் மறப்பாரா வென்று கிறிஸ்து நம்மைத் தைரியப் படுத்துகிறார்.

கடவுள் மகாப்பெரியவராய் இருப்பதால் பெரிய காரியங்களைத் தான் அவர் கவனிப்பார் என்று நாம் நினைக்கலாம் பெரிதும் உன்னதமுமான சிகரங்களை மாத்திரமல்ல, ஒரு சிறு புல்லையும் அவர் கவனிக்கிறார். திரளான தண்ணீரில் நிறைந்த சமுத்திரத்தை மாத்திரமல்ல, நமது கண்களில் சுரக்கும் ஒருதுளிக் கண்ணீரும் அவருக்கு மறைவானதல்ல. வானத்தின் நட்சத்திரங்களை மாத்திரமல்ல நமது தலை உரோமமெல்லாம் எண்ணி வைத்திருக்கிறார். லட்சக்கணக்கான இஸ்ரவேலரின் பெருமூச்சை மாத்திரமல்ல ஏழை அன்னாளின் பெருமூச்சும் அவருக்குத் தெரியும் இஸ்ரவேலின் திரள் சேனையை போஷிக்கிறவராக மாத்திரமல்ல சீதோன்நாட்டு ஏழை விதவையையும் போஷிக்க அவருக்குக் கவனம் உண்டு உலகத்தைச் சூழ்ந்திருக்கும் ஆகாயத்தை மாத்திரமல்ல, நாம் சுவாசிக்கிற கொஞ்ச அளவான ஆகாயத்திலும் அவர் கவனம் வைத்திருக்கிறார். அவர் மகாப் பெரியவராயிருந்தாலும் தாழ்மையானவைகளையும் அற்பமாக எண்ணப்பட்டவர்களையும் அவர் மறக்கிறவரல்ல.

1. நமக்கு உத்தியோகங்களைத் தெரிந்துகொள்ளுகிறவர் அவரே!

நாம் விரும்புகிறபடியல்ல, அவருடைய சித்தப்படியே அவர் தமது பிள்ளைகளை உத்தியோகத்தில் நடத்துகிறார். நாம் தெரிந்ததும், நாமே ஆயத்தம் பண்ணிக்கொண்டதுமான வேலை ஒன்றாயிருக்கலாம், நாம் இன்று செய்துவரும் வேலை இன்னொன்றாயிருக்கலாம். கலப்பை பிடித்து உழுகிறவனை தீர்க்கதரிசியாக அழைக்கிறார். ஆடுகளை மேய்க்கிறவன் சர்வ இஸ்ரவேலுக்கும் இராஜாவாகிறான். கழுதையைத் தேடப்புறப்பட்டவன் ராஜ அபிஷேகம் பெறுகிறான் ஆயததுறையிலிருக்கிறவன் அப்போஸ்தலனாகிறான். மீன்பிடிக்கிறவர்கள் மனுஷரைப்பிடிக்கிற மகாத்துமாக்களாகிறார்கள். வக்கீல் வேலைக்குப் படித்துத் தேறின பின்னி என்பவர் சபைகளை உயிர்ப்பிக்கும் வல்ல பிரசங்கியானார். சப்பாத்துக்கடையில் அலுவல் பார்த்த மூடி ஜாதிகளுக்கு சுவிசேஷத்தைக் கூறும் தேவ ஊழியனானார். நிலக்கரிக் கேணியில் வேலைசெய்த பில்லிபிரே ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணவும் அநேக கோவில்களைக் கட்டவும் அதிசயமாய் நடத்தப்பட்டார். தேக அப்பியாசத்தில் தேறிச்சமர்த்தன் எனப் பேரெடுத்தவன் போதகனும் பிரசங்கியுமானான்.

தன் வழியை நடத்துவது நடத்துகிறவனாலே ஆகிறதல்ல. வைத்திய வேலைக்குப் படிக்கிறார்கள், போதகர் ஊழியம் பார்க்கிறார்கள். போதகர் வேலைக்குப் படிக்கிறார்கள். போலீஸ் வேலைக்கோ, வியாபாரத் தொழிலுக்கோ போகிறார்கள். இவ்விதமாக அநேகர் தாங்கள் நாடினதும் ஆயத்தம் பண்ணினதுமான உத்தியோகததில் வைக்கப்படாமல் எதிர்பாராத உத்தியோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தேவன் நமக்காக உத்தியோகங்களைத் தெரிந்துகொள்கிறார். எந்த வேலையில் கர்த்தர் நம்மை வைத்திருக்கிறாரோ அந்த வேலையை உற்சாகத்தோடும் உண்மையோடும செய்யவேண்டியது நமது கடமை. உத்தியோகத்தில் ஏதாவது மாறுதல உண்டாகவேண்டுமென்று கடவுள் காண்பாராலுல் ஏற்றகாலத்தில் அவரே அதைச் செய்வார்.

2. நமக்கு வீடுவாசல் ஏற்படுத்துகிறவர் அவரே.

கர்த்தரை நம்பியிருக்கிறவர்கள் கைவிடப்பட்டார்கள். தாவீது அடைக்கலான் குருவிகளைக் குறித்து உமது பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்ததே என்று பாடினார் (சங் 84:3) அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களாகிய தமது பிள்ளைகளைத் திக்கற்றவர்களாக கடவுள் விடமாட்டார். எந்தப் பட்டணத்தில் அல்லது கிராமத்தில், எந்தப் பாகத்தில், எந்தத் தெருவில், எந்த வீட்டில் நாம் குடியிருக்க வேண்டுமென்பதை அவர் அறிந்திருக்கிறார் அதற்கேற்றவிதமாக அவர் நடத்துகிறார் (குடியிருப்பின் விஷயத்தில் நாம் சில சமயங்களில் தேவ ஆலோசனையைத் தேடாமல் ஆத்திரமாக ஒரு வீட்டைத் தெரிந்து கொண்டோமானால் அதைவிட்டு நம்மை வெளியேற்ற அவருக்கு அதிகாரட் செல்லாது) அவர் தமது பிள்ளைகளுக்குத் தேவையானதை அருள்வார், அடைக்கலான் குருவிக்கு வீடுகொடுத்தவர் நமக்கு வீடுகொடாமலிருப்பாரோ ? அவரே தமக்குப் பிரியமானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்துகிறார்.

3. நம்மை நடத்துகிறவர் அவரே.

தேவபராமரிப்பில் அவர் நம்மை நடத்துவது மிகவும் முக்கியம். அவருடைய நடத்துதல் அதிசயமானது. அது நமது புத்திக்கேற்றபடி இருக்க மாட்டாது கடவுள் இஸ்ரவேலரை வனாந்தரத்தில் நடத்தினார். அவர்கள் பிரயாணம் நமது பார்வைக்கு நேரே ஒழுங்காகத் தோன்றாமல் முன்னும், பின்னும் இப்பக்கமும் அப்பக்கமும், நதி மார்க்கமும் சமுத்திரமார்க்கமும், இப்படியும் அப்படியுமாக தாறுமாறாகத் தோன்றும். சங்கீதக்காரன்: "தேவன் அவர்களைச் செவ்வையானவழியில் நடத்தினார்" (சங்.107:7) என்றுகூறினார். ஆம் கர்த்தரு

டைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல. நமது ஜீவியத்தைக் கவனிக்கும்போது, சந்தோஷம் துக்கம், சுகம் சுகயீனம், திருப்தி வறுமை, லாபம் நஷ்டம் முதலான பலமாறுதல்கள் நிறைந்திருந்தன என்று காணலாம். ஆகிலும் இவ்வழியாக நடத்தினவர் கடவுளே என்று உணரும்போது அது செவ்வையான வழிதான் என்று நாம் அறிய வேண்டும். அப்போது விளங்காத அநேக விஷயங்கள் பிற்பாடு நமக்கு நன்கு விளங்கும். கடவுளுடைய அதிசயமும் ஞானமும் நிறைந்த நடத்துதலின் மாட்சிமையை பின்னால் உணர்ந்து, அறிந்து ஆனந்தப் பரவசமடைவோம்.

இயேசுவின் ஜெபப்பள்ளி.

குறிப்பு :—

அத்தியட்சர் அவர்கள் ஆலோசனையின்படி, இதுமுதல் இயேசுவின் ஜெபப்பள்ளிப்பாடங்கள், கிராமச் சபையாரும் படிக்கத்தக்கதாக, இலேசான நடையில் வெளியிடப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் கேள்விகளும் எழுதப்படும் ஆயினும், இப்பாடங்கள் ஆழ்ந்த கருத்துக்கள் உடையவை. மேலெழுந்தவாரியாக, நாவல் வாசிப்பதுபோல வாசிப்பவருக்கு இவை விளங்கா என்பது நிச்சயம். ஆகையால், இவற்றிற்காகச் சிறிது நேரம் செலவிட்டு ஜெபத்தோடு படிப்பது பயன் தரும்.

வீ. ஜெயராஜ்,
மொழிபெயர்ப்பாளர்.

பத்தாம் பாடம்.

உனக்கு என்ன வேண்டும்?

அல்லது

ஜெபம் திட்டவட்டமாயிருக்கவேண்டும்.

இயேசு அவனைநோக்கி: 'நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய்?' என்றார் (மார். **10 : 51** ; லூக். **18 : 41**).

இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டபோது, குருடன் "தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று சத்தமிட்டான். அந்தச் சத்தம் இயேசுவின் காதுக்கு எட்டினது. அவனுக்கு என்ன தேவை என்பதை அவர் அறிந்து, அதனை அவனுக்கு அருள ஆயத்தமாயிருந்தார். ஆனால் அவனுக்கு அருள் செய்யுமுன், 'நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறாய்?' என்று கேட்கி

ருர். இரக்கத்திற்காக அவன் செய்யும் பொதுவான விண்ணப்பத்தை மட்டுமல்ல, அவனுக்கு என்ன தேவை என்பதைத் திட்டவட்டமாய் அவன் வாயினாலேயே சொல்ல விரும்புகிறார். அவன் அதைச் சொல்லும்வரை அவன் சொஸ்தமடையவில்லை.

• இன்றும் அதே கேள்வியை அநேகரிடம் அவர் கேட்கிறார். அவர்கள் அக்கேள்விக்குத் திட்டமான பதில் தரும்வரை, அவர்கள் விரும்பியதை அடையார். ஆகையால் நமது ஜெபங்கள் அவருடைய இரக்கத்தைப் பெறுவதற்குரிய, பொதுவான விண்ணப்பங்களாயிராமல், திட்டவட்டமான விண்ணப்பமாயிருத்தல் வேண்டும். நமது கூக்குரலை அவருடைய இரக்கமிகுந்த இருதயம் விளங்கிக் கொள்ளவில்லையென்பது அன்று. அல்லது நமது ஜெபத்தைக் கேட்க அவர் தயாராயில்லை என்பதும் அன்று நம்முடைய நன்மைக்காகவே, நமது ஜெபம் திட்டவட்டமாயிருக்கவேண்டும் என்கிறார். அப்படிப்பட்ட திட்டவட்டமான ஜெபம் நமக்கு என்ன தேவை என்பதை நாம் நன்கு அறியக் கற்பிக்கிறது. அதற்கு நேரமும், சிந்தனையும், தற்சோதனையும் அவசியம் அப்பொழுது தான், நமது தேவைகளிலெல்லாம், மிகவும் பெரிய தேவை எது? என்பதை நாம் காணமுடியும். நமது விருப்பங்கள் உண்மையானவைகளா? அவற்றைப் பெற விடாமுயற்சி செய்வோமா? என்று அது நம்மை பரிசோதனை செய்கிறது. மேலும் அது நமது விருப்பங்கள் கடவுள் வாக்குக்கு உகந்தவைகளாக இருக்கின்றனவா என்றும் நாம் கேட்பவைகளை நிச்சயமாய்ப் பெற்றேதீருவோம் என்கிற நம்பிக்கை நமக்கு உண்டா? என்றும் நாம் தீர்மானம் செய்ய நம்மை நடத்துகிறது. விசேஷித்த விண்ணப்பத்திற்கு, விசேஷபதிலுக்காகக் காத்திருக்கவும் அப்பதில் வந்தபின் அதனை மறவாதிருக்கவும் அது நமக்கு உதவுகிறது.

அநேகமாய், நமது ஜெபங்கள் கடலளவு சொற்களும் கடுகளவு கருத்தும் உடையவைகளாயிருக்கின்றன. சிலர் கடவுளின் இரக்கத்திற்காக ஓலமிடுகின்றனர். ஆனால் எப்படிப்பட்ட இரக்கம் அவர்களுக்குத் தேவை என்பதைத் திட்டமாய் சொல்லப் பிரயாசப்படுவதில்லை. வேறு சிலர் பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி வேண்டுகின்றனர். ஆனால் எப்படிப்பட்ட பாவத்திலிருந்து விடுதலை வேண்டுமென்று குறிப்பிடுவதில்லை. வேறு சிலர் தம்மைச் சுற்றியிருக்கிறவர்களுக்காகவும், தங்கள் நாட்டிற்காகவும், உலகத்திற்காகவும் பொதுவாய் ஜெபிக்கின்றனர். ஆயினும் ஒரு திட்டவட்டமான காரியத்தைப் பற்றி ஜெபித்து அதற்குப்பலன் அடைவதில்லை. இப்படிப்பட்ட அனைவரையும் பார்த்து ஆண்டவர் 'நான் உங்களுக்குச் செய்யவேண்டுமென்று நீங்கள் 'உண்மையாக எதிர்பார்க்கிற காரி

யம் என்ன ?' என்று கேட்கின்றார். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தனித்தனி இடங்களும், வேலைகளும் உண்டு. ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவனின் தேவையும் வித்தியாசப்படும். ஒவ்வொரு விசுவாசிக்கும் அவனுக்குரிய வட்டாரமும், குடும்பமும், சிநேகிதரும், அயலகத்தாரும் உண்டு. இவற்றுள் ஏதேனும் ஒன்றைப்பற்றிக் குறிப்பாக வேண்டுதல் செய்தால், அது அவனை விசுவாசப் பயிற்சிப் பள்ளிக்கு நடத்தி, கடவுளிடம் நேரடியான தொடர்பு வைத்துக் கொள்ள உதவும். அப்படிப்பட்ட குறிப்பான விசுவாசமுள்ள ஜெபத்திற்கு நிச்சயமாய்ப்பதில் பெறுவதால் பொதுவான விண்ணப்பங்களிலும் நம்பிக்கை வளரும்.

மஜுபாவில், ட்ரான்ஸ்வால் போயர்களால், பயிற்சி பண்ணப்பட்ட படைகள் தோற்கடிக்கப்பட்டதைப்பற்றி அக்காலத்திய மக்கள் எவ்வளவாக ஆச்சரியமடைந்தனர் என்பதை நாம் யாவரும அறிவோம் அப்போயர்களின் வெற்றிக்குக் காரணம் என்ன? ஐரோப்பியப் போர் வீரன், கூட்டத்தை நோக்கிச் சுடப்பழகியிருந்தானே ஒழிய ஒவ்வொரு குண்டுக்கும் ஒவ்வொரு குறிப்பு வைத்துச் சுடப்பழகியிருக்கவில்லை. ஆனால் ட்ரான்ஸ்வால் போயர்களோ, வேட்டைத்தொழில் மூலம் வேறொரு பாடத்தைப் படித்திருந்தனர் ஒவ்வொரு குண்டையும் குறிப்பாக ஒரு ஆளின் மீது செலுத்தப் படித்திருந்தனர். அப்படிப்பட்ட பயிற்சியே ஆத்மீக வாழ்விலும் வெற்றிதரும் நமது இருதயங்களிலுள்ள கணக்கில்லாத விண்ணப்பங்களை, ஒரே சமயத்தில் ஏறெடுக்கும்போது, அவை ஒவ்வொன்றும், ஒரு குறிப்பான நோக்கத்துடன் ஜெபிக்கப்பட்டு, அதற்குரிய பதிலைப் பெற்றதா? என்று எண்ணிப் பாராமல் தோல்வி அடைகிறோம். இப்பொழுது உண்மையாக நான் விரும்புவது என்ன? அதனை விசுவாசத்தோடு ஜெபித்து அதற்குப் பதில் பெற எதிர் பார்க்கிறேனா? அதனை ஆண்டவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கத் தயாராயிருக்கிறேனா? எனக்குப்பதில் அவசியம் கிடைக்கவேண்டும் என்ற ஒப்பந்தம் கடவுளுக்கும் எனக்கும் உண்டா? என்ற இவை போன்ற கேள்விகளை ஆண்டவரின் பாதபடியில் வணங்கிப் பணிந்து நின்று கேட்போமானால், நாம் கோரும் காரியம் நிச்சயமாய்க் கைகூடுமென்பதற்குச்சிறிதும் சந்தேகமில்லை.

நீண்ட ஆடம்பரமான ஜெபம்தான் கேட்கப்படும் என்று எண்ணுகிற புறமதஸ்தரைப்போல, பரிசுத்த ஜெபத்தை வீணிலே உச்சரிக்கலாகாது என்று ஆண்டவர் எச்சரிப்பதற்கு இது ஒரு காரணமாகும் நாம் அடிக்கடி பல விஷயங்களைப்பற்றி ஜெபிக்கும் நீண்ட ஜெபங்களைக் கேட்கிறோம். அப்படிப்பட்ட ஜெபங்களுக்கு ஆண்டவர் கொடுக்கும் பதில் 'நான் உனக்கு என்ன

செய்ய வேண்டுமென்றிருக்கிறாய்?' என்பதே. என் தகப்பனாரின் அலுவலில், நான் ஒரு அந்நிய நாட்டிலிருக்க நேர்ந்தாலும், வெவ் வேறு விதமான இரண்டு கடிதங்களை எழுதுவேன் அவை அன்பு உள்ள குடும்ப விஷயங்கள் பற்றிய கடிதங்களாகவும் எனது அலுவல் விஷயமாக விசேஷித்த பொருட்களைக் கேட்கும் கடிதங் களாகவும் இருக்கும். அல்லது, அவை இரண்டும் அடங்கிய கடிதங் களாயிருக்கும். கடிதங்கள் போலவே பதில்களும் இருக்கும். குடும்ப விஷயம்பற்றிய ஒவ்வொரு வாக்கியத்திற்கும் நான் விசே ஷித்த பதில் எதிர்பார்ப்பதில்லை ஆனால் அலுவல்விஷயத்தில் கேட்ட ஒவ்வொரு பொருளும் என் தகப்பனார் அனுப்பினாரா? என்று பார்ப்பேன். இப்பின்னைய விஷயம் நாம் கடவுளிடம் ஜெபிக்கும் ஜெபத்திலும் காணப்படல்வேண்டும் நமது தேவை, பாவ அறிக் கை, அன்பு, விசுவாசம் தற்பிரதிஷ்டை முதலியவற்றுடன், நாம் விசேஷமாய்க் கேட்பது என்ன? நாம் எதிர்பார்ப்பது என்ன? என்பவைகளைப் பற்றிய திட்டவட்டமான குறிப்புக்கள் ஜெபத்தில் காணப்படவேண்டும். நமது வேண்டுகோள் கடவுளால் அங்கீகரிக் கப்பட்டதற்கும், ஒப்புக்கொள்ளப்பட்டதற்கும் அறிகுறி அவர் அருளும் பதிலாகும்.

ஆனால் ஆண்டவர் போதிப்பது இதிலும் அதிகம். நீ விரும்புவது என்ன? என்று அவர் கேட்கவில்லை. செய்யவேண்டுமென்றிருப் பது என்ன? என்றே கேட்கின்றார். விருப்பம் வேறு. தேவை வேறு. ஒரு பொருளை விரும்புகிறேன். ஆனால் விலையதிகமானால் அதைப் பெறவிரும்புவதில்லை. இதில் எனக்கு விருப்பமிருந்தாலும் அது கட்டாயம்வேண்டும் என்று எண்ணவில்லை. முழுச்சோம்பேறி யொருவன், சொத்துக்காரனாக விரும்புகிறான். ஆனால் அவனுக்கு அதைப்பற்றி மனவுறுதியில்லை பலர் இரக்ஷிக்கப்பட விரும்புகிறார் கள். ஆனால் மனவுறுதியில்லாமையால், தோல்வியடைகிறார்கள். எனவே மன உறுதி அல்லது சித்தமே முழு இருதயத்தையும் முழு வாழ்க்கையையும் ஆதீனம் செய்கிறது. என் சக்திக்குள்பட்ட ஒரு பொருளை நானடையச் சித்தமுடையவனாயிருந்தால், அதனை அடையுமட்டும் நான் சோர்ந்து போவதில்லை. இதனாலேயே 'உன் சித்தம் என்ன?' என்று கேட்கிறார். நாம் கேட்பதை என்ன தியாகம் செய்தாவது பெறவேண்டும் என்ற திடச்சித்தம் அல்லது மனத்திட்பம் நமக்குண்டா? என்பதே அதன் கருத்து. அவர் பதிலருள தாமதித்தாலும், அதனைப் பெறும் வரை ஓய்வின்றி வேண்டிக்கொள்ளும் திடச்சித்தம் நமக்குண்டா? எத்தனையோ ஜெபங்கள் வெறும விருப்பங்களாக மட்டுமிருக்கின்றன. ஏதோ கடமைக்காக ஒரொரு காலத்தில், 'ஆடிக் கொருதரம் அமாவாசைக் கொருதரமாக' அவற்றைப்பற்றி ஜெபிக்கிறோம். அப்புறம் அவற்றை

மறந்து விடுகிறோம், அவற்றிற்குப் பதில்களும் பெறுதிருக்கின்றோம்.

நமது விருப்பங்களை ஆண்டவருக்குத் தெரிவித்து, நமக்கு உசிதமானதை நமது சித்தத்தின்படியல்ல, அவரது சித்தத்தின்படியே செய்யும்படி விட்டுவிடுவது சிறந்ததல்லவா? என்று கேட்கலாம். எந்தக் காரணம் பற்றியும் இப்படிச் செய்யலாகாது என்பதே இதற்கு விடை. ஏனென்றால், விசுவாசமுள்ள ஜெபத்தில் பயிற்சி பெறுவதற்கே இயேசுவின் ஜெபப்பள்ளி. கடவுள் சித்தம் இன்னதென்று அறியாமல் ஜெபிக்கும் ஜெபங்களுக்கே அது பொருந்தும். ஆனால் சத்தியவேதத்தில் வாக்குத்தத்தம பண்ணப்பட்டிருக்கும் காரியங்கள்பற்றிக் கடவுள் சித்தம் என்ன என்பதை நாம் அறிந்திருப்பதால் அப்படிப்பட்ட ஜெபங்களுக்குப் பதில் அடையும் வரை முயற்சி செய்வது நம் கடமை என்பதை உணர்க. மத்தேயு ஒன்பதாம் அதிகாரம் 28-ம் வசனத்தில் இயேசு குருடர்களை நோக்கி, இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா?' என்று கேட்டார். மார்க்கு சுவிசேஷத்தில் உள்ளபடி இங்கே, 'உனக்கு நான் என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறாய்?' என்று கேட்கிறார். இவ்விரண்டு சம்பவங்களிலும் அவர்களுடைய விசுவாசமே அவர்களை இரக்ஷித்தது என்கிறார். சீரோபேனிக்கேயா ஸ்திரீயைப் பார்த்தும், 'உன் விசுவாசம் பெரிது நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது' என்றார். விருப்பத்திலும் திடசித்தமே பெரிது. விசுவாசமாவது என்ன? கடவுளின் வாக்குத்தத்தத்தை ஆதாரமாய்க் கொண்டதும், எனக்கு அது அவசியமாக வேண்டும் என்ற நோக்கத்தைத் தனது சித்தமாய்க் கொண்டதுமே விசுவாசம். மெய்யாக விசுவாசிப்பது மெய்யான திடச்சித்தமாயிருப்பதே.

அத்தகைய திடச்சித்தம் கடவுளை முழுவதும் சார்ந்திருப்பதற்கும் அவருக்கே கீழ்ப்படிவதற்கும் விரோதமானதல்லவா? என்று கேட்கலாம். இதுதான் இல்லை எப்படியென்றால், மெய்யான கீழ்ப்படிதலே கடவுளைக் கனப்படுத்துவது விசுவாசி ஒருவன் தன் முழுச்சித்தத்தையுமே கடவுளுக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுக்கும் போதுதான் பரமபிதாவிடம் தனக்கு வேண்டியதைக் கேட்கும் திடச்சித்தத்திற்கு அடிப்படையான உரிமையையும் வல்லமையையும் பெறுகிறான். ஆனால் சத்தியவேதத்தாலும், ஆவியாலும் வெளிப்படுத்தப்பட்ட கடவுள் சித்தத்தை ஒரு விசுவாசி ஒருதரம் தனது சித்தமாகவும் ஒப்புக்கொள்ளும்போது, இவ்விதம் புதுப்பிக்கப்பட்ட அவனது சித்தத்தை அவரது ஊழியத்தில் அவன் உபயோகிப்பது தக்கதல்லவா? சித்தமே (will) ஆன்மவல்லமையின் உச்சி. கடவுளின் சாயலில் முக்கிய அம்சமான மனிதனின்

இந்தச் சித்தத்தைப் பரிசுத்தப்படுத்திப் புதுப்பித்து முழுச்சக்தியுடன் சுயேச்சையாய் நடக்கச் செய்வதையே எல்லாவற்றிற்கு மேலாக, கிருபை விரும்புகிறது. தன் தகப்பனின் அக்கறையாயுள்ள அலுவல்களில் மட்டும் ஈடுபட்டவனும், தன் சுயசித்தத்தை யல்லாமல் தகப்பனின் சித்தத்தையே மதித்து நடப்பவனுமான ஒரு மகனிடமே தகப்பன் தன் அலுவலை ஒப்படைக்கிறான். அப்படியே கடவுள் தமது பிள்ளையிடமும், நீ உறுதியாய் விரும்புவது என்ன என்று கேட்கிறார். என் சித்தமல்ல, எல்லாம் கடவுள் சித்தம் என்பது ஆத்மீகச்சோம்பல், பொய்யான தாழ்மையின் போர்வை. இப்படிச்சொல்லுகிறவர்கள் கடவுள் சித்தம் இன்னதென்று அறிய முயல்வதுமில்லை அல்லது அவருடைய சித்தம் இன்னதென்றறிந்தாலும், அதனை விசுவாசத்தோடு பெற்றுக் கொள்ள முயல்வதுமில்லை. மெய்மனத்தாழ்மை பலத்த விசுவாசத்தின் தோழன். அவ்விசுவாசமே கடவுள் சித்தத்தைக் கண்டுபிடித்து அதனைத் தைரியமாய்க் கேட்கிறது.

கேள்விகள்

1. திட்டவட்டமான ஜெபத்தால் உண்டாகும் நன்மைகள் எவை?
2. போயர் யுத்தத்தால் ஆசிரியர் விளக்க விரும்புவது என்ன?
3. தகப்பனுக்கு மகன் எழுதும் இரண்டு விதக் கடிதங்களைப்பற்றி என் கூறப்பட்டது?
4. ஆண்டவர் இப்பாடத்தில் போதிக்கும் சத்தியம் என்ன?

இரக்ஷணிய மனோகரம்

குமாராநுபூதி

குமாரன்=ஸ்ரீ கிறிஸ்துவாகிய இரட்சண்ய மூர்த்தி. அநுபூதி= அவருடைய திருவடித் தொழும்பில் அடையும் ஆன்ம ஐஸ்வரியம் அது மெய்க் கிறிஸ்தவர்களுக்கு இலவசமாய் அருளப்படும் ஸ்வர்க்கப்பேறு இத்தியாதி கவிகளை மனனம்பண்ணி அநுசந்தானஞ் செய்து வருபவர்களே, அந்த நன்மைக்குச் சாக்ஷிகளாயிருப்பார்கள். இதுபற்றியன்றே இந்தியாவில் கவிகள் பிரபல்யம் அடைந்தன.

1. தாதைமடி மீதுஉலவித் தங்கியதும் வானாட்டுத்
தூதர்முடி மீது நனி தோய்ந்ததுவும்— மாதரையில்
கான் உருவி அன்பர் கருத்துற்று இருப்பதும் இம்+
மானுவேல் செஞ்சே வடி.

தாதை=பரமபிதா. நனி=நன்றாய். மா + தரை=பெரிய பூமி கான்=காடு, உற்று=பொருந்தி. செம் சேவடி=நல்ல சிவந்தபாதம் இம்மானுவேல்=மனு உரு எடுத்து மக்களுக்குள் வசித்த இறைவன்.

பிதாவின் மடியில் தங்கி, தூதர் முடிமீது படிந்து, காட்டினூடே அலைந்து, அன்பர் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் இறைவன் திருவடிகளே நமக்கு அடைக்கலம்.

2. பாசாடவி யூடு பதைத்து மனம்
வேசாறி விடாய்த்து உயிர் வீடுவலோ
ஈசா நரதேகம் இயைந்த பர +
வாசா, அருள், ஞான வரோதயனே.

பாச + அடவியூடு=ஆசையாம் காட்டினூடே. வேசாறி= அலுத்து, விடாய்த்து=சோர்ந்து உயிர் வீடுவலோ=உயிரை விடுவேனோ, உயிரை விடவேண்டியது வருமோ. இயைந்த=பொருந்திய பரவாசா=பரத்தில் வாழ்பவனே. அருள்=திருவாய் மலர்ந்தருள்வாயாக. ஞானவரோதயன்=ஞானவரங்களுக்குப் பிறப்பிடமானவன்

3. தேராமல் உஞற்றிய தீமை எல்லாம்
பேராமல் என்முன்பு பிறங்க நைவேன்
ஓர் ஆதரம் இன்று உனையன்றி எனக்கு
ஆரா அமுதாய அரும்பொருளே.

தேராமல்=ஆராயாமல், உஞற்றிய=செய்த, பேராமல்=நீங்காமல், பிறங்க=தோன்றி நிற்க. நைவேன்=வருந்துகிறேன். ஓர் ஆதரம் இன்று=ஒரு துணையும் இல்லை. ஆரா அமுதாய=தெவிட்டாத தேவாமிர்தமாகிய, அரும்பொருளே=கிடைத்தற்கரிய மெய்ப்பொருளே.

4. நல்லான் ஒரு தந்தையை நாடி வரும்
பொல்லா மகனில் கொடியேன் புலையேன்
எல்லாம் அறியும் திருஉள்ளம் இரங்கு
அல்லாய் எனில் ஆர் புகல் ஆண்டவனே.

பொல்லாமகனில்=நல்ல தன் தந்தையை நாடிவந்த கெட்ட குமாரனைப் பார்க்கிலும், புலையேன்=இழிஞன் நான், அல்லாய் எனில்=நீ இரங்கவில்லையானால். ஆர் புகல்=யார் எனக்குப் புகலிடம்.

5. பண்ணுடு மொழிச்சியர்பால் மயலே
உண்ணுடி ஒழிந்தன நாட்கள் எல்லாம்
கண்ணுடிய தண்ணருள் காட்டுதியால்
விண்ணுடர் தொழும்கழல் வித்தகனே.

பண்நாடும்=இனிய இசை பொருந்திய. மொழிச்சியர்பால்=சொல்லையுடைய பெண்களிடம். மயல் உள் நாடி=காதலை மனதில் விரும்பி விரும்பி நாட்கள் எல்லாம, ஒழிந்தன=கழிந்தன கண் நாடிய தண் அருள்=உன் கண்ணில் பொருந்திய குளிர்ந்த கிருபையை காட்டுதி=காட்டியருள். ஆல்=அசை விண் நாடர்=தேவர், தேவ தூதர் தொழும்=வணங்கும், கழல்=திருவடிகளையுடைய. வித்தகனே=ஞானசொரூபனே.

6. அன்று அஞ்சுறு தீ நரகு ஆழவரும்
என்றஞ்சி மலங்கி இடர்ப்படுவேன்
உன் தஞ்சம் அலால் ஒருதஞ்சம் இலேன்
இன்று அஞ்சல் என அருள் எம்பரனே.

அன்று=மரணநாளில், அஞ்சு உறு தீ=அச்சத்தைத் தரும் தீயையுடைய, நரகு ஆழ வரும்=நரகத்தில் ஆழ்ந்த நேரிடும். இடர்ப் படுவேன்=துன்பப்படுகிறேன். அஞ்சேல் என=அஞ்சாதே என்று அருள்=திருவாய் மலர்ந்தருள்வாயாக.

கி. மு. சங்கப் பொருட்கள். —செப்ட். 1954.

சமுதாயப்பிரச்சினைகளைப்பற்றி வேத போதனை.

செப்ட்

„ 1. உண்மையின்மை உபா. 25 : 13
„ 2 ஏமாற்றுதல் 19:13
„ 3. இயேசுக்கிறிஸ்துவின் சமுதாயசேவை லூக். 4:4,18,19
„ 4. கன்னிமரியாளின் கீதம் லூக். 1:52
„ 5. ஐஸ்வரியவான்கள் கண்டனம்பெறல் லூக். 6:24

கடவுளும் உலகப்பொருளும்—நமது ஆண்டவரின் போதனை

„ 6. போட்டாபோட்டி—விதைக்கிறவன் உவமை மத். 13:3-8
„ 7. சேர்த்து வைக்கும் முதலாளி - மூடனான ஐஸ்வரியவான் லூக் 12:13-21
„ 8 யோவான் ஸ்நானகன்—வஞ்சத்தைப்பற்றிய போதனை லூக். 3:10-14
„ 9 கடவுளும் உலகப்பொருளும் மத். 6:19-24
„ 10. ஆஸ்தியை நிதானமாய் உபயோகித்தல் லூக். 16:19-31

செப்ட்.

„ 11. அநீதியுள்ள உக்கிராணக்காரன் லூக். 16:1-9

„ 12 தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மாற் 8:36

ஆஸ்தியைப்பற்றி கிறிஸ்தவ மனப்பான்மை

„ 13. கிறிஸ்தவ பொது உடமை அப். 2:44 45

„ 14. கேட்டான ஐஸ்வரியம் யாக். 5:1-3

„ 15. பண ஆசை எல்லா தீமைக்கும் வேர்.

„ 16. மத்தியகாலத்தில் பணத்தைக் குவித்த முதலாளிகளைத் தாக்கிய தலைவர்கள்.

„ 17. தாமஸ்மூர் என்பவரின் "நவயுகம்"

„ 18. ஐஸ்வரியமுள்ள வாலிபன் லூக். 18:18-25.

„ 19 கிறிஸ்தவ பொது உடமை

20-26 வரை பொது உடமையும் கிறிஸ்தவ மதமும்

பொது உடமையைப் பற்றிய அனுகூலமான, பிரதிகூலமான குறிப்புகளை விஸ்தரிக்கவும். உலகத்தாரின் ஈடேற்றத்திற்கு அஸ்திபாரம் கிறிஸ்துவே—அவரே நமது நம்பிக்கை

தீர்க்கதரிசிகளின் செய்தி

„ 27. ஆமோஸ் ———கி-மு 760-735

„ 28. ஓசியா ———கி-மு 750-737

„ 29. ஏசாயா ———கி-மு 740-700

„ 30 மீகா ——— கி-மு 724.

Lenox Press, Pasumalai, 9—8—1954. 426 C.

விளம்பரம்

(Audio-Visual) பிரச்சாரத்திற்குறிய சாமான்கள் பசுமலை வேதப்பாடசாலையில் இருக்கின்றன. இவைகளை உபயோகப்படுத்த விரும்பும் தலைவர்கள் கீழ்கண்ட குறிப்புகளைக் கவனிக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள சபைகள் நமது போர்டின் மூலம் நன்கொடையாக இரண்டு (projectors) கருவிகள் அனுப்பி இருக்கின்றன. ஒன்று மின்சாரத்தாலும் மற்றொன்று கியாஸ் விளக்காலும் இயங்கும். இவை புதிது ஆக நன்றாய் உழைக்கும். கெட்டுப்போகாமல் நல்ல நிலமையில் வைப்பதற்கு உதவியாக இந்த யந்திரங்களை தெரிந்தவர்கள் மட்டும் உபயோகிப்பது நல்லது. விருப்பமுள்ளவர்கள் ஒரு குருவானவர், அல்லது ஸ்தாபனத்தலைவர் மூலமாய் ஏற்கனவே எனக்குத் தெரிவிக்கவேண்டும் கடன் வாங்குகிற பொறுப்பாளர் எத்தனை நாளைக்குள் யந்திரத்தைத் திருப்பித்தர முடியும் என்பதை அதற்காக ஏற்பட்டுள்ள நோட்டில் கையெழுத்திடவேண்டும். கவலையீனத்தால் பொருளுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு தான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கவேண்டும். அத்தியட்சாதீன சினிமா யந்திரத்திற்கு உரிய ஒரு பாகமும் (Transformer) சில நல்ல படங்களும் இல்லாததால் அதைத் தற்போது உபயோகிக்கமுடியாது. பின்வரும் பிலிம் படங்களும் கலர் ஸ்லேடுகளும் என்னிடம் உண்டு :— இயேசுக் கிறிஸ்துவின் ஜீவியசரித்திரம்

ஆமோஸ்
யோவான் ஸ்நானகன்
எம்மா ஊர்ரஸ்தா
மூன்று சாஸ்திரிகள்.
பரிசுத்த பிள்ளையாகிய இயேசு
கிறிஸ்துவக் குடும்பம்
மிருகங்களின் குடி இருப்பு
பவுலின் மிஷனரி பிரயாணம்
குஷ்டரோகம்
மலேரியா

இவைகளைத்தவிர வேறு பிலிமாவது, ஸ்லேடுகளாவது தேவையாக இருந்தால் ஏற்கனவே எனக்குத் தெரிவிக்க வேண்டும். அவைகளை வாடகைக்கு வருவித்துக் கொடுக்கலாம்.

இவைகளைத்தவிர கீழ்கண்ட பொருள்களின் பேரில் ஏராளமான பிரசார பிரதிகள் உண்டு. அவையாவது

சர்மவியாதிகள், இருமல், விஷக்கிருமிகள், பத்து சுகாதார விதிகள், வயிற்றோட்டம், குஷ்டரோகம், பற்களைப் பாதுகாத்தல், க்ஷயரோகம், கக்கூசுகளை சுத்தமாக வைத்தல், சுத்தம், சுகாதாரத்தைப்பற்றிய சார்ட்டுகள்.

இப்படிக்கு உங்கள் நண்பன்
இ. இ. உவைட்